# SATI SAKTI

## A FARCE IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM, B.A., B.L.

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipurr, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin vs Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati-Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapaihy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl Subadra Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant, Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The Dead Revived, Asthanapura Dramatic Company, Music-Mad, Nine Playlets, Sabapathy, Zamindar, Siva Temples in India & beyond Parts I & II, Siva Temple architecture, etc. in Tamil ; and Harischandra, and Yayathi in English.

FIRST EDITION

1-00

*All rights reserved*] 1947 [Price

# சதி சக்தி

அல்லது

# இடையனும் இடைச்சியும்

## ஓர் ஹாஸ்ய தமிழ் நாடகம்

நாடகப் பேராசிரியர்
ராவ் பஹதூர் ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்,
அவர்களால் இயற்றப்பட்டது

**அவர் எழுதிய மற்ற நூல்கள்**

லீலாவதி—சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள்—ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டுபிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுர நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்க்ள் இந்தியாவிலும் அப்பாலும், முதற் பாகம்—இரண்டாம் பாகம், சிவாலய சில்பங்கள் முதலியன.

முதற் பதிப்பு

1-00

காபி ரைட்] 1947 [விலை [redacted]

Printed at the Liberty Press, G. T. Madras, Q.H.Ms. 499—500 Copies.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

# சதி சக்தி

அல்லது

# இடையனும் இடைச்சியும்

## நாடக பாத்திரங்கள் :

கருடக்கோனன்

நாகக்கோனி

ஓர் சந்யாசி

சில சிறுவர்கள்

**கதை நிகழிடம் :—** அடையாளம்பேடு

**காலம் :—** தற்காலம்

# சதி சக்தி

அல்லது

# இடையனும் இடைச்சியும்

## காட்சி - 1

இடம் - ஒரு இடையன் வீடு                    காலம் - அதிகாலை.

ஒரு புறம் ஒரு பசுவும் கன்றும் கட்டியிருக்கிறது. இன்னொரு புறம் கயிற்றுக் கட்டிலின்பேரில் கருடக் கோனன் படுத்துக்கொண்டு தூங்குகிறான். நாகக் கோனி அம்மாள் வருகிறாள்.

நாக. அடே எம்புருசா - எம்புருசா! பொழுது வெடிஞ்சி எத்தினி நாழி ஆச்சி, இன்னும் தூங்கரத் தெப் பாரு! கொரட்டெ உடரதும் காததூரம் கேக்குது. இந்த புருசனெ என் தலையிலே கட்டனுங்களே. இந்தச் சோம்பேரிக்கி சாப்பாடு போட, எங்கம்மாவூடு போட்ட நகையெல்லாம் ஒண்ணொன்னா வித்தாச்சி. வவுத்தெப்பாரு வண்ணான்சாலேபோலே! இதா-எழுந் திரு.....எழுந்திருண்ணா....(தட்டி எழுப்புகிறாள்).

கருட. (கண்ணை மூடிக்கொண்டே) தா....நானு தூங்கறேன்- எழுப்பாதே (குரட்டை விடுகிறான்).

நா. நல்ல தூக்கம்தான்! தூக்கத்திலே பேசரத்துக்கு மாத்திரம் தெரியுதோ? எழுந்திரு. எழுந்திரு.... சோம்பேறி....பொழுது விடிஞ்சி பத்து நாழியாச்சே (தட்டுகிறாள்).

கருட. (கண்விழித்து) தா....என்னே தொந்தரவு பண்ணாதே, இன்னும் சூரியனே வல்லே.

நா. சூரியன் வல்லையா? இதோ ஒம்மூஞ்சியிலே வரச் சொல்றேன் சூரியனே. (ஜன்னலைத் திறக்கிறாள்; சூரிய வெளிச்சம் அவன் முகத்தில் விழுகிறது).

கருட. தா, என்னே ஏன் எழுப்பறே இதுக்குள்ளே ?

நா. எழுந்து, அந்த பசுமாட்டெப் பால் கறந்துடு. கன்னுக்குட்டியைக் குளிப்பாட்டிடு. நானு ஒலையிலே அரிசியைப் போட்டுட்டு, மோர் வித்துக்கினு வார்ரேன்.

கருட. அதெல்லாம் முடியாதடி இண்ணேக்கி....எனக்கு ஒடம்பு ஒரு மாதரி இருக்குது, இண்ணேக்கி.

நா. ரெண்டு பூசை வெச்சா சரியாப்பூடும். (ஒரு சுள்ளியை எடுக்கிருள்).

கருட. அடிக்காதே அடி! அடிக்காதேடி....எனக்கு வவுறு நோவுது.

நாக. நோவாதா பின்னே....ஆக்கர சோத்தெயெல்லாம் அப்படியே கொட்டிக்கினு திண்ணு....நானு சொல்ற படி கேளு—வவுத்தெ நொந்தா, இண்ணேக்கிப் பட்டினி போடரேன் சரியாப்பூடும். நாளேக்கி—

கருட. ஐஐயோ வேணும் வேணும்! என்னு ஒணும்னாலும் செய்யி, பட்டினி மாத்திரம் போடாதே, வா தவரி வவுத்து நோவுண்ணு சொன்னேன்-கால் நோவு.... கால் பிடிப்பு - கீலுவாய்வு. என்னலே படுக்கையெ வுட்டு எழுந்திருக்கக்கூட முடியலே. (எழுந்திருக்க முடியாததுபோல் பாசாங்கு செய்கிருன்).

நா. அதோ! அதோ கட்டில் கீளே பாம்பு, பாம்பு! (கோனன் குதித்து ஓடுகிருன் மூலைக்கு)

கருட. எங்கே பாம்பு! எங்கே பாம்பு! (நாகக்கோனி சிரிக்கிருள்) என்னடி சிரிக்கிறியே ? நானு அழறேன்.

நா. அதான் சிரிக்கிறேன். பாம்புமில்லே கீம்புமில்லே. இப்போ அந்த கீலு வாய்வுயெல்லாம் என்னமா போச்சி (சிரிக்கிருள்).

கருட. அடி-சும்மா சிரிக்காதே. சிரிச்சா-எனக்கு அப்புறம் கோவம் வரும்.

நா. வரட்டுமே கோவம். கோவம் வந்தா என்னு செய்வே?

கருட. அப்புறம்—மறுபடியும் அப்படியே படுத்துக்கினு தூங்கிடுவேன்.

நா. அதெல்லாம் ஒதவாது. முன்னே பாலே கர.

கருட. கோனி, இதோ பாரு, நீ வேறே என்ன செய்யச் சொன்னாலும் செய்யறே. இந்தப் பசுவும் பாலே கரக்க மாத்திரம் சொல்லாதே. அது நேத்து கிட்டே போனபோது, என்னே ஒதச்ச ஒதையே நெனேச்சிக் கினு, இன்னும் நோவுது.

நா. எங்கே ஒதெச்சுது காட்டு பாக்கலாம்.

கருட. ஒதெக்கலே....ஒதெக்கப் பாத்துதோ இல்லையோ? நீகூடப் பாக்கல்லே?

நா. கொஞ்சம் முரட்டுத்தனம்தான் பண்ணுது. ஆனா அந்த அடுப்பெ சரியா எரியப் பாத்துக் கஞ்சியெ காய்ச்சிவை. நானு இந்த மோரை பக்கத்துத் தெருவு கல்யாண வீட்டிலே, அப்படியே பானையா கேட்டாங்க, வித்துட்டு வர்றேன். (போகிறாள்).

கருட. இந்த பிசாசு ஒரு நிமிஷம் என்னே சும்மா இருக்க உடேன் இண்ணுது - என்னமானா வேலேயிட்டுக் கினே இருக்குது. சீக்கிரம் அடுப்பே நண்ணா எரிய வுட்டு, கஞ்சியே காய்ச்சி எறக்கிவுட்டு, கொஞ்சம் தூங்கறேன். (பல சுள்ளிகளை அடுப்பில் வைக்கிறான். அது புகைய ஆரம்பிக்கிறது) கண்ணெல்லாம் போவுது, பொகையாலே! (கோபத்துடன் சுள்ளிகளை உள்ளே தள்ள, பானை உடைகிறது) அடேடே! என்னா செய்கிறது? அவ வந்தா அடிப்பா - ஒரு யுக்தி பண்ணறேன். (கட்டைகள், பானை, அடுப்பு, எல்லாவற்றையும் வெளியில் எறிகிறான்; மாடுகன்றுகளை அவிழ்த்துவிடுகிறான்; பிறகு, படுக்கையில் வந்து படுத்துக்கொள்ளுகிறான். தூங்குவதுபோல் பாசாங்கு செய்கிறான்.)

நாகக்கோனி வருகிறாள்.

நா. அடெ என்சாமி, இன்னைக்கி நம்பளுக்கு நல்ல நாள். கண்ணாலெ ஊட்லே மோர் அம்மட்டும் வாங்கிக்கினு துட்டுக்கொடுத்துட்டு, பலகாரம் கூட கொடுத்தாங்க, இதோபாரு - நம்ப கஞ்சியோடே.....அடெ எம்மவனே!

கருட. ஏதோ ஏதோ (எழுந்திருக்கிறான்)

நா. அடுப்பு! சட்டி! கிட்டியெல்லாம் எங்கே காணோம்? கஞ்சி என்னா ஆச்சி?

கருட. கஞ்சியெல்லாம் காய்ச்சி வரும் சீக்கிரம்.

நா. காய்ச்சி வருமா? என்ற பண்ணெ அத்தையெல்லாம்? சாப்பிட்டுட்டையா? பசுமாட்டையும் காணோம்! நெசத்தேச் சொல்ரையா? (கட்டையை எடுக்கிருள்).

கருட. கோனி, கோனி, சும்மா கோவிச்சுக்காதே. நானு சொல்றத்தே கேட்டா நீ சந்தோஷப்படுவே. என்ற ஆச்சி - நீ போனவுடனே - அடுப்பே நன்ற பத்த வெச்சா - அது பொகைய - ஆரம்பிச்சுது - என் கண்ணெல்லாம் பூட்டுது. என் கண்ணு போனாலும் பரவாயில்லே, பசுமாடுங் கண்ணும் பொகையாலே ரொம்ப கஷ்டமாப் போச்சி! ஒடனே எனக்கு நேத்து அரமனெ அடிங்க பொரசங்கத்துலே சொன்னரே.... நம்ப கேட்டமே-ஒருவனுக்கு இம்மிசெ செய்ய கூடாது இண்ணு - அது காபகம் வந்தது. ஒடனே, அதுங்களெ அவுத்துவிட்டேன். அப்பொ - நானு இந்த நல்ல காரியம் செய்தனே இண்ணு, ஒரு தெய்வம் ஜன்னலண்டெ வந்து பாத்து, அப்பா-என்ற நானு சொல்றது, தெரியலே? நீயும் கஷ்டப்படாதே போ- எங்கையிலே அந்த அடுபபு கிடுப்பு எல்லாம் குடு இப்படி, நானு கஞ்சி காய்ச்சி எடுத்தாரேன்-இண்ணு சொல்லிச்சி - அப்புறம் நானு - அதுக்காவ - அடுப்பு சட்டி, பானெ, கீனெ சுள்ளிக் கட்டையெல்லாம் எடுத்து ஜன்னல் வழியா கொடுத்திருக்கறேன்.

நா. (ஜன்னல் வழியாக வெளியில் பார்த்து) ஓ அப்படியா சமாச்சாரம்! இதோ இரு வாரேன். முன்னே அந்தப் பசுவையுங் கண்ணையும் பிடிச்சாறேன் - அப்புறம் உன்னை விசாரிக்கிறேன்! (போகிருள்).

கருட. அதுக்குள்ள நானு இந்தப் பலகாரத்தை விசாரிக்கறேன். (அவள் கொண்டுவந்த பலஹார மூட்டையை அவிழ்த்துத் தின்கிருன்).

## காட்சி - 2

**இடம்** - அதே வீடு **காலம்** - பகல்.

கருடக்கோனன் நின்றுகொண்டிருக்கிருன். நாகக்கோனி, அவனெதிரில் ஒரு தயிர் பானையைக் கொண்டுவந்து வைக்கிருள்.

நா. தா, இப்பவே சொன்னேன் கேளு. இந்தப் பானையிலே நாலுபடி மோர் இருக்குது, இப்பவெ பாத்

துக்கோ. நேத்து சொன்னமாதிரி பாதி பானெதயிரு இருந்துது இண்ணு பொய் கிய் பேசினையா அப்புறம் நானு கெட்டவளாயிருப்பேன். சரியா வித்து பன்னெண்டு காசு கொண்டாரணும். இல்லாப்போனு, ஒனக்கு சாப்பாடு போடமாட்டேன் இண்ணைக்கி.

கருட. உம், இந்த மோரே யாரும் வாங்காமப்போனு-நானு என்ன செய்யறது?

நா. உம்! ஓகோ, அந்தக் கதையெல்லாம் ஒதவாது. எங்கேயானலும் தூங்கிவுட்டு யாரும் வாங்கலெ இண்ணு சொல்லப்பாக்கரையா? அப்படி விக்காதே சும்மா வந்து சேந்தையோ - உம்முதுவாவது விரியணும் - அந்த தொடப்பக்கட்டையாவது முறியணும். தா....நானு சொல்றதைக் கேளு. இண்ணைக்கி வெள்ளிக்கிழமெ; அந்த சாமியாரு அந்த ஆலமரத்து அடியிலே பொரசங்கம் பண்ணுவாரு வழக்கத்தே போலே. அங்கே போனேண்ணு சீக்கிரம் வித்துடலாம். எடுத்தும்போ சீக்கிரம். (கருடக்கோனன் மூக்கால் அழுதுகொண்டே அப்படியே செய்கிறன்).

## காட்சி - 3

**இடம்** **காலம் - பகல்.**

*அவ்வூரில் ஓர் ஆலமரத்தடி. ஒரு சன்யாசி பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறர். ஜனங்கள் சுற்றிலும் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கின்றனர். கருடக்கோனன் கூட்டத்தின் வெளியில் மோர் பானையை பக்கத்தில் வைத்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருக்கிறன்.*

சனியாசி.—ஆகவே சகோதரர்களே, நான் மூன்று நாட்களாகச் செய்துவந்த பிரசங்கத்தின் மொத்த தாத்பர்யம் என்னவென்றால், அஹிம்சா பரமோ தர்மம், என்பதுதான். அதாவது அஹிம்சியே மிகவும் உத்கிருஷ்டமான தர்மமென்பதாம். இதை நான் பன்முறை திருப்பித் திருப்பிச் சொன்னது இந்த சிரேஷ்டமான உண்மை உங்கள் மனதில் படியும் பொருட்டே. இனி நீங்கள் விடைப்பெற்றுக்கொள்ளலாம். (ஜனங்கள் கலைகின்றனர்).

முதல் சிறுவன். அடேய், இந்த இடையன் என்னடா கேட்டுக்கினு இருந்தான்? பவுல்லேகூடவா தூக்கம்!

இ. சி. அடேய், இந்த மோர் பானையெ எவனாவது தூக்கிகினு பூட்டா, இவன் என்னடா செய்வான்?

மூ. சி. அடடே! எனக்கு ஒரு யுக்தி தோணுது. ஒரு வேடிக்கை பண்ணலாமா? உன் வீடு கிட்டதானே இருக்குது - இத்தெ மெள்ளமா எடுத்துவா சொல்றேன். (இருவருமாக அந்த மோர்பானையை எடுத்துச் செல்கிறார்கள்).

## காட்சி - 4

அதே யிடம் கருடக்கோனன் மோர்பானையின் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறான். மேற்சொன்ன இரண்டு சிறுவர்களும் வருகிறார்கள். மோர் பானையுடன்.

மூ. சி. அடே, நம்ப அதிஷ்டம் இன்னும் இவன் இப்படியே தூங்கிகினு இருக்கிறான். நம்ப வேடிக்கைக்கு நல்ல ஆசாமி ஆம்பிட்டான்! ஆம்பிட்டான் இண்ணைக்கி!

இ. சி. எழுப்பலாம் இவனே - இல்லாபோனா இருட்டர வரைக்கும் இங்கேயே தூங்கிகினு இருப்பாம்போலே யிருக்குது. அடே அப்பா....மோர்காரா எழுந்திரு! எழுந்திரு!

கருட. யாரைய்யா அது? என்னே தொந்தரவு பண்ணாதேங்கோ. நானு பொரசங்கம் கேட்டுக்கினு இருக்கறேன்.

இ. சி. நன்னா கேக்கரே! அந்த சன்யாசி பிரசங்கம் எல்லாம் முடிச்சுட்டு ஊட்டுக்கும் பூட்டாரே அப்பா....

கருட. அதெல்லாம் எனக்குத் தெரியும் ஐயா. அவர் பண்ண பிரசங்கத்தெ பத்தி யோசனே பண்ணிக்கினு இருக்கறேன். என்னே தொந்தரவு பண்ணாதைங்கோ. (தூங்கப் பார்க்கிறான்).

மூ. சி. என்னடாப்பா யோசனை பண்றே? அத்தெ சொல்லிவிட்டுத் தூங்கு.

கருட. (கண்களை கிமிட்டிக்கொண்டு) என்னடா இங்கேயும் கஷ்டமாபோச்சி - ஊட்லேதானின்னு பாத்தா.... என்னய்யா ஒணும் ஒங்களுக்கு?

மூ. சி. என்ன யோசனை பண்றே? அத்தெ மாத்திரம் சொல்லிடு.

கருட. அவுரு - சன்னுசி....உம்....மோர் தர்மம் மோர் தர்மம் இண்ணுரே அது என்னண்ணு யோசனே பண்ணறேன்.

இ. சி. பாத்தையா கிட்டா! நானு அப்பவே சொல்லலே, நம்பளப்போலவே இந்த ஆளும், சன்னுசி சொன்னதைக்கேட்டு, மோர் தர்மம் பண்ணலாம் இன்னு யோசிச்சிக்கினு இருக்கிறுப்போல இருக்குது. ஏம்பா, அப்போ இந்த பானேயிலிருக்கிற மோரையெல்லாம் தர்மம் பண்ணப்போரயா என்ன?

கருட. ஆமாம் - அதெல்லாம் முடியாது. அப்புறம் எம் பொஞ்சாதிக்கி யாரு உத்திரவு சொல்ரது? அவ இத்தெ வித்துக்கினு வரச்சொன்னுளே?

மூ. சி. ஆமாண்டா முருகா, அவன் சொல்வதும் நாயந்தானே. ஏழெ பாவம்! அவன் என்னமாடா தர்மம் பண்ணுவான்! அப்பா, இந்த மோர் பானேயெ அப்படியே நாங்க தர்மம் பண்ணணும்....இதுக்கு என்ன வெல சொல்லரே?

கருட. படியா வாங்கினு, ரெண்டு காசு - உம் - அப்படியே மொத்தமா வாங்கனு - 12 காசு.

மூ. சி. கணக்கு சரியாத்தான் சொல்ருன்! மொத்தமா வாங்கினு நமக்காவ கொஞ்சம் தள்ளிக்கொடுக்கிருன். சரிதாம்பா....அப்படியே பன்னெண்டு காசு கொடுக்கிரோம். இத்தெ அப்படியே தூக்கிக்கினு வா தலே மேலெ - அதோ இருக்குதே - மாரியம்மா கோவில் - அங்கே அம்மனுக்கு இத்தெ நெய்வேத்யம் பண்ணிப்பிட்டு அப்புறம் இத்தெ வர்ரவங்களுக்கெல்லாம் தர்மம் பண்ணிவிடரோம்.

கருட. அவ்வளவு தூரம் இத்தெ தூக்கிகினு வர்த்துக்கு எனக்கு கூலி கொடுக்கத் தேவலேயா?

இ. சி. அதுக்கென்ன ஒரு காசு கொடுக்கிரோம்.

கருட. அந்த காசெ நானு எடுத்துக்குவேன். இந்தப் பன்னெண்டு காசெதான் எம்பொஞ்சாதிக்குக் கொடுப்பேன்.

இ. சி. உன் இஷ்டப்படியே செய்யப்பா....தலேமேலே தூக்கிக்கொ இந்தப் பானேயெ.

கருட. காசு?

மூ. சி. முருகா, காலமே ஒங்கிட்டே பதினேஞ்சு காசு கொடுத்தேனே. அதிலே இவனுக்குப் பன்னெண்டு காசு கொடுத்துடு. அங்கே கொண்டாந்தபிறகு ஒரு காசு அப்புறம் கொடுக்கலாம்.

இ. சி. எங்கிட்டே அந்தக் காசு இல்லேயேடாப்பா. வர்ர வழியிலே பன்னெண்டு காசுக்கு இந்த ஊதுவத்தியெ அம்மன் கோவிலுக்காக - வாங்கிப்பிட்டேனே. (கட்டைக் கையில் காட்டுகிறான்).

மூ. சி. பரவாயில்லே. நீ வாடாப்பா - எங்கவூரு கோயில் எதிரில்தான் இருக்குது. அங்கே கொடுத்துடரோம் வா.

கருட. மின்னே காசு கொடுக்கணும்.

இ. சி. மின்னே, நண்ணு கொடுத்துட்டு - அப்புறம் எங்க வேலையைப் பாக்கிறோம். (பானையை அவன் தலையில் வைத்து புறப்படுகிறார்கள்).

## காட்சி - 5

**இடம்** - மாரியம்மன் கோயில். **காலம்** - பகல.

துவஜஸ்தம்பத்தின் அருகில் கருடக் கோனன் வேப்பிலேயால் அலங்கரிக்கப்பட்ட மோர் பானையை தலையில் தூக்கிக்கொண்டு வருகிறான். கிருஷ்ணனும் முருகனும் இரண்டு தடிகளை எடுத்துக்கொண்டு வருகின்றனர். அவர்களுக்குப் பின்னால் சில பிள்ளைகள் சிரித்துக்கொண்டு வருகின்றனர்.

கிருஷ். மோர் பானேயே, தர்மம், பண்ரத்துக்கு முன்னே நம்ப வழக்கம்போலே இந்த தொஜ ஸ்தம்பத்தெ மூணுதரம் சுற்றிக்கினு வரணும். அப்பா, நீ முன்னே நட. (கருடக்கோனன் முன்பு நடக்கிறான். கிருஷ்ணன் பாட, பிள்ளைகள் பாடிக்கொண்டு அவன் பின்னால் சுற்றி வருகின்றனர்.)

மாரியம்மா, மாரியம்மா ! என்னெ
பாராயம்மா, நீ பாராயம்மா - நீ தான்
நீரு அம்மா நீரு அம்மா - நல்ல
மோரு அம்மா, மோரு அம்மா ! - இது
பாரு அம்மா பாரு அம்மா - கழு
நீரு அம்மா நீரு அம்மா ! - டமில் !!

(கடைசியாக வரும்போது முருகன் கைத்தடியால் பானையை உடைக்க, அதிலிருந்து கழுநீரெல்லாம் கருடக்கோனான் பேரில் அபிஷேகம் ஆகிறது. பிள்ளைகளெல்லாம் கல்லென்று சிரித்துவிட்டு ஓட்டம் பிடிக்கின்றனர். அச்சமயம் முருகனும் கிருஷ்ணனும் ஓடும்போது, முருகன் கையிலிருந்த கட்டு கீழே விழுந்து விடுகிறது. கூட்டம் கூடின பிள்ளைகளும் ஓடிப்போய்விடுகின்றனர்).

கருட. இதுக்கு என்னா செய்யறது? ஊட்டுக்கு இப்படியே போனா ஒதே விழும். இப்படியே அந்தக் கொளத்திலே முழுகிவிட்டுப் போவோம். பரமோர் தர்மம். ஆ அதுதான் சரியான உக்தி. (விரைந்து போகிறான்)

## காட்சி - 6

இடம் - கருடக்கோனான் வீடு காலம் - சாயங்காலம்.

நாகக்கோனி தயிர் கடைந்துகொண்டிருக்கிறாள்.

நா. வெளக்கு வெச்சாச்சி - இன்னம் எம் மவன் ஊட்டுக்கு வரலையே? பக்கத்து ஊட்டு சுந்தரி - அவம் பேர்லே கண்ணை போட்டுக்கினு இருந்தா, இந்த மக்கு கள்ளங்கவடு தெரியாதது, என்னமானா ஏமாந்துபோச்சோ என்னமோ? இல்லாப்போனா இருட்லே வழி தெரியாதே எங்கேயானா ஆப்டுகிச்சோ ...நானாவது போய் தேடிப்பாக்கிறேன். (எழுந்திருந்து கதவண்டைப் போய்ப் பார்க்கிறாள்). அதோ தூரத்துலே வருது - வரட்டும், வரட்டும். இண்ணைக்கு நன்னா பூசெ வெக்கிறேன். பாவம் தொடப்பத்தாலெ அடிக்கக் கூடாது இந்த தாம்புக் கவுத்தாலே நன்னாப் பாக்கிறேன்.

கருடக்கோனான் பாடிக்கொண்டு வருகிறான்.

கருட. பரமோர் தர்மம், பரமோர் தர்மம்!

நா. கெட்ட கேட்டுக்குப் பாட்டு ஒண்ணா!

கருட. பரமோர் தர்மம், பரமோர் தர்மம்!

நா. எம் மவனே, எங்கே இத்தினி நாழி?

கருட. பரமோர் தர்மம், பரமோர் தர்மம்!

நா. என்னாது பரமோர் தர்மம், எங்கே மோர் பானே?

கருட. பரமோர் தர்மம், பரமோர் தர்மம்!

நா. பரமோர் தர்மமும் பாப்பார மோர்தர்மமும் ! எங்கே மோர் வித்த பணம்? மோர் பானே எங்கே ?

கருட. பரமோர் தர்மம், பரமோர் தர்மம்!

நா. தென்னடி இது! பயித்தியம் கியித்தியம் புடிச்சி பூட்டு தா என்ன ?

கருட. பரமோர் தர்மம்! பயித்தியம்? பரமோர் தர்மம் பயித்தியமா ?

நா. இந்தக் கதெயெல்லாம் எங்கிட்ட ஒதவாது. நானு காலம்பரவே சொன்னேனு இல்லையா ? மோர் வித்த பணத்தையும் பானெயையும் கொண்டாந்து வைக்கிறயா இல்லையா ?

கருட. மோர் - தர்மமா பூட்டுதே, எப்படி வரும்?

நா. உம்!....உங்கிட்டே இருந்து நெசத்தே வரவழைக்கிற வழியிலே வரவழைக்கிறேன். தூண்லே கட்டி நண்ணு பொத்தனுதான் வாஸ்தவம் வரும். வா இப் படி (அவனைப்பற்றி இழுக்கிருள்).

கருட. அடி அடி! என்னெ அடிக்காதே. வாஸ்தவத்தெ சொல்றேன்?

நா. ஆ! அப்படி வா! அடி ஒதவர மாதிரி ஆம்படையான் கூட ஒதவமாட்டான்! எங்கே பணம்? எங்கே மோர் பானே?

கருட. உம் - காலமே பானெயே எடுத்துகினு போனேனு- நீ சொன்னபடியே - அந்த சாமியார் இருக்கிற ஆல மரத்துங் கிட்டப்போனேன் - போனேனு ?

நா. சீக்கிரம் சொல்லு.

கருட. அந்தச் சாமியார் பொரசங்கத்தெ கேட்டுக்கினே இருந்தேனு - அவரு மோர் தர்மம் ரொம்ப நல்லது- மோர் தர்மம் ரொம்ப நல்லது - இண்ணு-சும்மா பொர சங்கம் பண்ணுரு....பண்ணுரா ?

நா. என்னு, கதெ கிதெ ஒப்பிக்கிருயா?

கருட. இல்லேடி, நீ ஒணும்னு யாரேஒணும்னுலும் கேட்டுப் பாரு.

நா. அவர் சொன்னு ?

கருட. உம் - அத்தெ கேட்டுக்கினே இருந்து....அப்படியே தூங்கிட்டேன்.

நா. நானு அப்பவே சொன்னேனே இல்லேயோ? தூங்க கீங்க வேணும்னு - எவனாவது தூக்கிக்கினு பூட்டானு என்னு பானெயெ?

கருட. இல்லெ, இல்லெ-நானு-அப்புறம் எழுந்து, அங்கே பக்கத்திலே இருக்கிற மாரியம்மா கோவிலுக்குப் போய்-மோர் தர்மம் பண்ணிட்டேன்.

நா. தர்மம் பண்ண மூஞ்சியைப்பாரு! பொய் பேசர மூஞ்சி! அப்படிதான் இருக்கட்டும். அந்தப் பானே எங்கே?

கருட. பானெயா? அது... அது....அத்தெ கொண்டா ரப்போ - அதுவா ஒடஞ்சிபோச்சி!

நா. உம்....அப்போ இந்தக் கவுறு அதுவா உம் முது வுலே பொத்தட்டும்!

கருட. அடி, என்னெ என்னமானு அடிச்சையா! அப்பு றம் பத்திரம்.

நா. என்னு செய்வே அடிச்சா?....பாக்கலாம்.

கருட. அடிச்சையா செத்துப்பூடுவேன்.

நா. எதோ செத்துப்போ பாக்கலாம். (கயிற்றால் அடிக்கத் துரத்திக்கொண்டு வருகிறாள்).

கருட. (ஓடிக்கொண்டே) அடி அடி! அப்புறம் செத்துப் பூட்டா உனக்குத்தான் கஷ்டம்.

நா. எனக்கென்னு கஷ்டம்?

கருட. அப்புறம் நீதான் அழுவே....

நா. நான் அழுமாட்டேன்.

கருட. அப்பொ நானு சாவமாட்டேன்.

நா. சாவர மூஞ்சியெப்பாரு! பானெய கொண்டாந்து வைக்கிறயா இல்லேயா? (ஒரு அடி கொடுக்கிறாள்).

கருட. (அழுதுகொண்டே) ஏண்டி? பொம்மனாட்டி ஆம்படை யானே அடிக்கலாமாடி? எல்லாரும் என்னெப்பாத்து சிரிக்கராங்கடி. எம்மானம் போவுது! நானு கெணத் துலே விழுந்து செத்துப்பூடறேன். (வெளியே ஓடு கிறான்).

நா. அப்படியாவது தொலே. இந்தச் சோம்பேறியெக் கட்டிக்கினு அழுரது போதுமிண்ணு போவுது. (வெளியில் கிணற்றில் ஏதோ விழுந்த சப்தம் கேட்கிறது). ஐஐயோ! வாஸ்தவமா உழுந்துட்டானு என்னு! (ஓடுகிறுள்)

## காட்சி - 7

இடம் - கொல்லே - மத்தியில் கிணறு.

அதன் ஒரு பக்கத்தில் கோனுன் ஒளிந்துகொண்டிருக்கிறுன். கோனி ஓடிவருகிறுள்.

நாக. ஐஐயோ! எம்புருசா, எம்புருசா! கெணத்துலே விழுந்துட்டானே! (கிணற்றுக்குள் பார்க்கிறுள்) தென்னுது ஒன்னேயும் காணுமே. கெணத்துலே யொழுங்கால் தன்னிகூட இல்லே. சத்தம் கேட்டுதே. (மறுபடியும பார்த்து) ஓகோ, அந்தக் கல்லெத் தூக்கிப் போட்டிருக்கிறுன் ஆசாமி (இச்சமயம் கோனுன் தலே நிமிர்ந்து பார்க்கிறுன்) ஓகோ இங்கேயா ஒளிஞ்சகிக்கினு இருக்கே? வா இப்படி சொல்றேன் (அவனேக் கிணற்றைச் சுற்றிச் சுற்றித் துரத்துகிறுள்; அவன் ஓடுகிறுன் கடைசியில் எதிர்பக்கமா ஓடி அவனேச் சந்தித்து பிடித்துக் கொள்ளுகிறுள்) அவரா, எம்மவுனே, எனக்குப் பயமா காட்டரே! வா வூட்டுக்குச் சொல்றேன். (இழுக்கிறுள்)

கருட. இல்லேடி, இல்லேடி, உனக்குப் பயம் காட்டுவேனு நானு?

நாக. பின்னே ஏன் அந்தக் கல்லெ தூக்கிக் கெணத்துலே போட்டே?

கருட. நானு கெணத்துலே உழுந்தா எப்படி இருக்குமிணு பாக்கரத்துக்கோசரம் மொதல்லே கல்லெ போட்டுப் பாத்தேன். அது அப்படியே அமுங்கிப் போச்சி. அதுபோலே நான் கெணத்துலே உய்ந்தா முழுகிப் பூடுவேன் இண்ணு - உழலே.

நா. இந்தக் கதெயெல்லாம் தெரியும் எனக்கு. எனக்குப் பயம் காட்டத்தான் செய்திருப்பே....வா ஊட்டுக்கு உனக்கு புத்தி காட்டரேன் நானு (இழுத்துக்கொண்டு போகிறுள், கோனுன் தப்பி ஓடிவிடுகிறுன்). அடே எம் புருசா! இவனே என்னு செய்யறது? அப்படியாவது தொலேஞ்சு போவட்டும். சோத்துக்கில்லாதெ ரெண்டு

நாள் செத்து சுண்ணும்பானு, தானு - திரும்பிவரான். அப்பவாவது புத்தி வருதா பாப்போம். (போகிறுள்).

## காட்சி - 8

இடம் - ஓர் ஏரிக்கரை. காலம் - சாயங்காலம்.

ஓர் தபசி தன் கப்பரையில் உணவை வைத்துவிட்டு, தன் காஷாய உடையையும் அதன் பக்கம் வைத்துவிட்டு, ஏரியிலிறங்கி ஜபம் செய்கிறுன். ஜபம் முடிந்ததும் ஓம சாந்தி ஓம சாந்தி சாந்தி சாந்தி ! என்று சொல்லிவிட்டு நீராடுகிறுன்.

கருட. ஓம சாந்தி-ஓம சாந்தி - சன்னுசி ரொம்ப நலலவரு. நம்பளுக்கு மந்தரம்கூட சொல்லிக் கொடுக்கராரு. சாப்பாடு போட்டாரு-துணி கொடுத்தாரு (சன்யாசியின் உடையைப் போட்டுக்கொள்கிறுன்). மந்தரமும் சொல் லிக் கொடுத்தாரு. ஓம சாந்தி - ஓம சாந்தி. (விரைந்து போகிறுன்

## காட்சி - 9

இடம் - கருடர் கோனுன் வீடு காலம் - பகல்.

ஜன்னலுக்கு வெளியில் கருடர்கோனுன் சன்யாசி உடையில் கேட்டுகொண்டிருக்கிறுன்.

நாகக்கோனி வருகிறுள்

நா. (தயிர் கடைந்துகொண்டே துக்கிக்கிறுள்). உம் உம்! ஒரு வருசமாச்சு ஊட்டேவுட்டுப்போயி! எங்கே செத்துச் சுண்ணும்பானுேனே! என்னண்ணுலும் எம் புருசன்! சோம்பேறியாயிருந்தாலும் எம்பேர்லே அவனுக்கு ரொம்ப ஆசெ. நானு அவனெ அடிச்சி தொறத்தி யிருக்கக்குடாது ! பாவம்! மாரியம்மா, மாரியம்மா! நீதான் எம்புருசனெ எங்கிட்ட கொண்டாந்து உட ணும் - உனக்கு நல்ல பூசெ போடுறேன்.

கருட. (வெளியிலிருந்து) ஓம சாந்தி, ஓம சாந்தி, ஓம சாந்தி.

நா. என்னது! எம்புருசன் கொரலாட்டமா இருக்குதே! (வெளியல் விரைந்துபோகிறுள்).

## காட்சி - 10

இடம் - நாகக்கோனி வீட்டிற்கு வெளிப்புறம்.

கருடக் கோனுன் சன்யாசி உடையில் ஓம சாந்தி என்று சொல்லிக்கொண்டிருக்கிறுன்.

நா. அடே! - யாரோ சன்னியாசி, ஏமாந்துபோனே!-உம்-மாரியம்மா, மாரியம்மா! (திரும்பிப் போகப் பார்க்கிறாள்).

கருட. (குரலை மாற்றிக்கொண்டு) அம்மா, ஒனக்கு என்ன ஒணும்?

நா. ஏ! உனக்கென்னாத்துக்கு அது? ஏ சன்னாசி, எனக்கு ஏதாவது ஒணும்-உம் வேலையெப் பாத்துக்கினு போ.

கருட. நாம் பூட்டால் நீ வேண்டரது வராது? பத்திரம்.

நா. ஏ சன்னாசி, என்ன ரொம்பப் பேசறே....நானு என்ன வேண்டரது சொல்லு பாக்கலாம்.

கருட. (கண்ணை மூடித் திறந்து) உம் புருசன் திரும்பி வர ணும்னு வேண்டரே!

நா. ஆ! ஆ சன்னாசி, நீங்க ரொம்ப தெரிஞ்சவரா இருக்கிறீங்க. எம்புருசன் எப்போ திரும்பிவருவான் சொல்லுங்க சாமி.

கருட. அப்படிக்கேளு. (கண்ணை மூடித் திறந்து) அதோ இருக்கிற மாரியம்மா கோவிலுக்கு தெனம் ஒருவாரம், பலஹாரம் கொண்டுபோய் வைச்சி, ராத்திரியிலே பூசைபோடு. ஒருத்தருக்கும் தெரியாமெ....ஒரு வாரத்துக்கெல்லாம் மாரியம்மா உம் புருசனெ அனுப்புவா.

நா. சாமி, சாமி, அப்படியே செய்யறேன்.

கருட. நல்ல பலகாரமாயிருக்கட்டும். இல்லாப்போனா, மாரியம்மாளுக்குக் கோபம் வரும்.

நா. இல்லே சாமி, அப்படியே செய்யறேன் நல்ல பலகாரமா கொண்டுபோய் பூஜை போடறேன். எப்படியாவது எம்புருசன் திரும்பிவந்தா போதும்.

கருட. ஓம் சாந்தி, ஓம் சாந்தி. (போகிறான்).

## காட்சி - 11

இடம் - மாரியம்மன் கோயில் காலம் - இரவு.

மாரியம்மன் விக்கரகத்திற்குப் பின்பாக கருடக்கோனன் ஒளிந்துகொண்டிருக்கிறான். நாகக்கோனி ஒரு தட்டில் பலகாரம் கொண்டுவருகிறாள்.

நா. (பலகாரத் தட்டை எதிரில் வைத்து) எங்கம்மா, மாரியம்மா! இண்ணைக்கி நல்ல பலகாரமா கொண்டாந்

திருக்கிறேன். நல்ல வடை சுட்டாந்திருக்கிறேன். (தலையில் குட்டிக்கொண்டு தோப்பளம் போட்டுக் கொண்டே) அம்மா! எங்கொறையே நீதான் நிறைவேத் தணும்.

கருட. (பின்புறமிருந்து) அப்படியே, நாளைக்கி ஆமவடை யாக் கொண்டா! போ! போகும்போது கதவெ சாத்திக்கினு போ. திரும்பிப் பார்க்காதே!

நா. அப்படியே அம்மா (அப்படியே செய்கிருள்).

கருட. (வெளிவந்து பலஹாரத்தைச் சாப்பிடுகிருன்).

## காட்சி - 12

இடம் - நாகக்கோனி வீடு.

நாகக்கோனி ஆமவடையை தட்டில் அடிக்கிக்கொண்டிருக் கிருள்.

நா. எனக்கென்னமோ சந்தேகமாயிருக்குது. கல்லு தெய்வம் பேசுமா? அதுவும், ஆமவடெ கேக்குமா? இந்தப் பலகாரத்தையெல்லாம் என்னமா சாப்பிடுது அது? இண்ணைக்கிக் கொஞ்சம் ஒளிஞ்சிக்கினு பாக்க ணும்-என்ன நடக்குதுண்ணு-ஒரு உக்தி பண்ணரேன் (தட்டை மாத்திரம் எடுத்துக்கொண்டு வெளி கிளம்புகிருள்).

## காட்சி - 13

இடம் - மாரியம்மன் கோயில்

நாகக்கோனி வருகிருள்.

நா. அம்மா, இதோ கேட்டபடியே கொண்டாந்திருக் கிறேன். (தட்டை வைத்துவிட்டு தொழுதுவிட்டு கதவை மூடிவிட்டு வெளியில் ஒரு பக்கமாக பதுங்கிக்கொண்டிருக் கிருள்).

கருட. (கொஞ்சம் பொறுத்து வெளிவந்து) பூட்டிருப்பா, இண் ணைக்கி நம்புளுக்கு நல்ல சாப்பாடு. மாரியம்மா தயவு லே. கொளத்தண்டை போயி, கை கால் கழுவிக்கினு வர்ரேன். வெளியே போகிருன்; அவன் போனவுடன், மறைந்திருந்த நாகக்கோனி மெள்ள உள்ளே வருகிருள்).

நா. நானு நெனச்சபடியே இருக்குது! வரட்டும், வரட்டும் எனக்கு மாத்திரம் உக்தி தெரியாதோ (விக்கிரகத்தின் பின்புறம் போய் உட்கார்ந்துகொள்கிருள்).

நா. அடே! - யாரோ சன்னியாசி, ஏமாந்துபோனே!-உம்-மாரியம்மா, மாரியம்மா! (திரும்பிப் போகப் பார்க்கிறாள்).

கருட. (குரலை மாற்றிக்கொண்டு) அம்மா, ஒனக்கு என்ன ஒணும்?

நா. ஏ! உனக்கென்னாத்துக்கு அது? ஏ சன்னாசி, எனக்கு ஏதாவது ஒணும்-உம் வேலையெப் பாத்துக்கினு போ

கருட. நாம் பூட்டால் நீ வேண்டரது வராது? பத்திரம்.

நா. ஏ சன்னாசி, என்ன ரொம்பப் பேசறே....நானு என்ன வேண்டரது சொல்லு பாக்கலாம்.

கருட. (கண்ணைமூடித் திறந்து) உம் புருசன் திரும்பி வரணும்னு வேண்டரே!

நா. ஆ! ஆ சன்னாசி, நீங்க ரொம்ப தெரிஞ்சவரா இருக்கிறீங்க. எம்புருசன் எப்போ திரும்பிவருவான் சொல்லுங்க சாமி.

கருட. அப்படிக்கேளு. (கண்ணைமூடித் திறந்து) அதோ இருக்கிற மாரியம்மா கோவிலுக்கு தெனம் ஒரு வாரம், பலஹாரம் கொண்டுபோய் வைச்சி, ராத்திரியிலே பூசைபோடு. ஒருத்தருக்கும் தெரியாமெ....ஒரு வாரத்துக்கெல்லாம் மாரியம்மா உம் புருசனெ அனுப்புவா.

நா. சாமி, சாமி, அப்படியே செய்யறேன்.

கருட. நல்ல பலகாரமாயிருக்கட்டும். இல்லாப்போனா, மாரியம்மாளுக்குக் கோபம் வரும்.

நா. இல்லே சாமி, அப்படியே செய்யறேன். நல்ல பலகாரமா கொண்டுபோய் பூஜெ போடறேன். எப்படியாவது எம்புருசன் திரும்பிவந்தா போதும்.

கருட. ஓம சாந்தி, ஓம சாந்தி. (போகிறான்).

## காட்சி - 11

இடம் - மாரியம்மன் கோயில் காலம் - இரவு.

மாரியம்மன் விக்கரகத்திற்குப் பின்பாக கருடக்கோனன் ஒளிந்துகொண்டிருக்கிறான். —நாகக்கோனி ஒரு தட்டில் பலகாரம் கொண்டுவருகிறாள்.

நா. (பலகாரத் தட்டை எதிரில் வைத்து) எங்கம்மா, மாரியம்மா! இண்ணைக்கி நல்ல பலகாரமா கொண்டாந்

## காட்சி - 14

இடம் - அதேயிடம்.
கருடக்கோனன் வருகிறன்.

கருட. மாரியம்மா - நல்ல மாரியம்மா - (உட்கார்ந்து துணியை எடுத்துவிட்டு தட்டில் இருக்கும் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக்கொள்கிறன்). து, து, து, து! என்னது சாணி யாட்டம் இருக்குதே!

நா. (பின்புறமிருந்து குரலை மாற்றி) அடே பாபி, என் எதிரில் துப்புகிறயா ?

கருட. (மிகவும் பயந்து) இதன்ன! பிசாசு பேசுதே!

நா. பிசாசல்ல! நான்தான் மாரியம்மா!

கருட. அம்மா! அம்மா மன்னிக்கணும், மன்னிக்கணும்!

நா. திருட்டுப் பயலே! ஒனக்குத் தண்டனே விதிக்கப் போரேன்!

கருட. வாணுங்க, வாணுங்க! (விழுந்து நமஸ்கரிக்கிறன்).

நா. ஆனல் நான் சொல்ரபடி செய்யரயா ?

கருட. செய்யரேன் அம்மா! செய்யரேன் அம்மா!

நா. இனிமேலே நீ இந்த ஊரை விட்டுட்டு போவக் கூடாது!

கருட. இல்லையம்மா இல்லே!

நா. ஒம் பொண்டாட்டி சொல்றபடி நடந்துக்கினு இரு! ஏ நாகக்கோனி! உம்புருசனே இனி அழைச்சிக்கினு ஊட்டுக்குப் போ! (வெளியே வருகிறள்).

கருட. ஏண்டி! நீயா பேசினது? ஏய், நீ இப்படி என்னெ ஏமாத்தலாமா ?

நா. நீ மாத்திரம் என்னெ ஏமாத்தலாமா? வா வூட்டுக்கு (கையைப் பிடித்து இழுக்கிறள்).

கருட. ஆமாண்டி, ஆமவடெ எங்கே?

நா. அல்லாம் ஊட்லே சுட்டு வச்சிருக்கறேன். வா மாரி யம்மா கோவுல்லே சத்தியம் பண்ணபடி நட-அல்லாம் தர்ரேன். (இருவரும் போகின்றனர்).

நாடகம் முடிகிறது.